# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.45/2013

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா.4 |
| பெயர் | : | மாரிமுத்து |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | நீலமேகம் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை 1872ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் 3-ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு 4வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என் மனைவி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து எங்களுக்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் குடியிருந்து வரும் வீடான சர்வே

எண் 75/20 உட்பட சர்வே எண் 75/3 ஆகியவற்றிற்கும் பட்டா என் பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 75/ 19 வருவாய் ஆவணங்களில் என்னவாக உள்ளது என்றால் யார் பெயரிலும் பட்டா இல்லை நத்தமாக உள்ளது. அது அரசு புறம்போக்கு நத்தமாக தற்போது உள்ளது என்றும் அதற்கு முன் நடராஜன் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. அடசிவயல் கிராமத்தில் நீலமேகம் மகன் மாரிமுத்து என்பது யார் என்றால் நான் தான். நீலமேகம் மகன் மாரிமுத்து என்பவர் நடராஜன் மீது சர்வே எண் 75/19 தொடர்பாக வேறு ஏதும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடராஜன் மீது சர்வே எண் 79/19 க்கு வேறு ஏதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஓ.எஸ்.48/96 என்ற எண்ணில் இதே நீதிமன்றத்தில் நீலமேகம் மகன் மாரிமுத்து என்பவர் நடராஜன் மீது தாக்கல் செய்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு என்றால் அந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. (மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது வாதி தரப்பில் மேற்படி ஆவணம் தங்களுக்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது அதனால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). நான் ஏற்கனவே தாவா சொத்து சம்பந்தமாக நடராஜன் மீது வழக்கு தாக்கல் செய்து

விட்டேன் என்றும் தற்போது என் மனைவியை வைத்து மீண்டும் அதே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் பெயரில் எனது ஊரில் நிறைய சொத்துக்கள் இருக்கும் பொழுது நான் என் மனைவியை வைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

3. நான் எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளவாறு தாவா சொத்தை நானோ என் மனைவியோ அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்புரை ஏற்பட்டுள்ளதால் தற்போது என் மனைவி மூலமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது முன் தீர்ப்பு தடை மூலம் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும் அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக என் மனைவி தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.27 16:57:51 +0530